விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 114 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 29 புதன்கிழமை (12.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு!


## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் புகையிரத நிலையம் மீது தாக்குதல்



(பரந்தன்)

பரந்தன் புகையிரத நிலையம் மீது நேற்று குண்டர் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

பரந்தன் புகையிரத நிலைய 11

## நலன்புரி பணியாளர் அடித்துப் படுகொலை

### புத்தூர்ச் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சா.வகச்சேரி நலன்புரி பணியாளர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று புத்தூர் சந்திப் பகுதி 11

### வட்டுக்கோட்டையில்

## குடும்பஸ்தர் ஒருவர் வீதியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கல்லூரி வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் சுன்னாகம் முடிவேம்படியைச் சேர்ந்த நாகன் தேவராஜா (வயது-63) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

# பயங்கரவாத சட்டம் 13வது திருத்தம்

## சர்வதேசத்துக்கு இலங்கை விளக்கம்

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து சர்வதேச சமூகத்துக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



### மிருசுவிலில்

## விபரீத முடிவெடுத்த பெண் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

மிருசுவிலில் விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர் தனது வீட்டின் மேல் மாடியில் 11

### 'மதப் பிரிவினரே வெளியேறுங்கள்'

## அச்சுவேலியில் போராட்டம்

### பொலிஸார் வருகையால் குழப்பநிலை

(யாழ்ப்பாணம்)

அரசுக்கு சொந்தமான நெசவுசாலையை அத்துமீறி கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் மதப் பிரிவினரே வெளியேறுங்கள் எனத் தெரிவித்து 04



### வவுனியா சின்னடம்பன் பகுதியில்

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா சின்னடம்பன் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கனகராயன்குளம் குறி 11



### நீர்வேலி மேற்கில்

## இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி மேற்குப் பகுதியில் இளை 11

## ஐ.எம்.எப் நிதி தொடர்பில் ஏப்.25இல் சபையில் விவாதம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், அது ஏப்ரல் 25 முதல் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசியல் கட்சி 11

## எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை

### பிரதமரிடம் கையளிப்பு

(கொழும்பு)

எல்லை நிர்ணய குழுவின் புதிய அறிக்கை நேற்றுக் காலை பிரதமர் தினேஷ் குணவர்த் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
04 - 06 - 1947

மறைவு
09 - 04 - 2023

## திருமதி பவானி குணராசன் (புவனசுந்தரி)

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Markhamஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவானி குணராசன் அவர்கள் 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருட்கவிமாமணி வே.செல்வ நாயகம் (முன்னாள் விவேகானந்தா அச்சக உரிமையாளர்) நாகரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், குணராசன் (முன்னாள் குணம் அன் கோ உரிமையாளர்) அவர்களின் ஆருயிர் மனைவியும், நிமலன், சுதாந்தி, நிசாந்தி, கௌசிகா (CPA, CGA) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தி, அரவிந்தன் (Automotive Quality Controller), இளமுருகன் (அம்பாள் ரேடிங்), ராம்பிரகாஷ் (Canadian Air Force) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனிக்கா (ஆசிரியை) - அனுஜன் (Optician), நிஜேன் (York University), பவித்ரா (Immigration Canada) - நிஷான் (Senior Analyst CIBC), சஜித்ரா (Service Canada), நகீஷ் (Service Canada) - நிதர்சிகா (Service Canada), கேஷன் (Advisor to the Deputy Minister of Health Canada), கேஷிகா (ஆசிரியை), ஹரிஷன் (University of Ottawa), ஆத்மன், ஆத்மிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதிரன் அவர்களின் ஆருயிர்ப் பூட்டியும், காலஞ்சென்ற மாலினிதேவி (முன்னாள் அதிபர் CCTMS, கொக்குவில்) மற்றும் சிறீதரன், கிருபாகரன், கிரிஜாலினி, பரிபாலினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற வைத்தியர் வேதநாதன் மற்றும் சிவகுமாரி, கமலா, வரதராசா, கமலநாதன் காலஞ்சென்றவர்களான கனகராசா, பத்மநாபன், சுவேந்திரராசா, மகேந்திரராசா மற்றும் சுசிலாதேவி, ஜெயராஜா, பத்மாதேவி, விஜயராஜன், பாலராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 12.04.2023 (புதன்கிழமை) மதியம் 1.30 மணிக்கு Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada) நடைபெற்று மாலை 4 மணியளவில் அவரின் பூதவுடல் Highland Hills Funeral Home & Cemetery (12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada) எடுத்துச் செல்லப்பப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
+16477788731

(15226)


## உடனடி வேலைவாய்ப்பு

வாழ்க்கையாளர் பிரதிநிதி (பெண்)
துப்பரவு பணியாளர்கள் (ஆண்/பெண்)
நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு 15 km அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
Whatsapp Your Bio Data
(15219)
077 792 2265


## மும்பை வெற்றி



16 ஆவ்து ஐ.பி.எல் தொடரில் டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 19.4 ஓவர்கள் முடிவில் 172 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி இறுதி பந்து பரிமாற்றத்தில் வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ரோகித் சர்மா தெரிவானார்.

(ம-7)

# கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவுத்துறையில் அளப்பரிய சேவையாற்றி கூட்டுறவாளராக திகழ்ந்து இவ்வுலகை விட்டுச் சென்ற



## அமரர் இராசரத்தினம் சுப்பிரமணியம்

(தலைவர், வவுனியா மாவட்டக் கூட்டுறவுச் சபை
தலைவர், எல்லப்பர் மருதங்குளம் சி.க.வ.கூ. சங்கம்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!!!

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
இல. 12, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-6341)

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை


## AUSTRALIAN MIGRATION VISA....

Ever dreamed about living in Australia?
We will make it happen.
Ful fill your dreams. below 45 years of age.
IELTS is a must.
For details
(15227)
Rajeevan
+94 777 687 821
spraj54@gmail.com

## ஜேர்மனி செல்லத் தயாரா...?

உயர் தரம் வரையான 12 வருட பாடசாலைக் கல்வி மற்றும் வயதெல்லை 25. ஜெர்மன் மொழி கற்றல் வேண்டும். ஜெர்மனியில் முன்னணி நிறுவனங்களில் தொழில் பயிற்சியுடன் வேலை உறுதி.
பயிற்சிக்காலத்தில் மாதம் 1000 Euroற்கு குறையாத சம்பளம். இரண்டாவது அணியில் (Second Batch ல்) சேர்வதற்கு முந்துங்கள்.
(15228)
Nifco - 077 033 3713
077 768 7821
nifco2016@gmail.com
www.nifco.lk


# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கற்கண்டு

வடமராட்சியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் அரியாலையை தற்போதைய வசிப்பிடமாகக் கொண்டவருமான கலாபூஷணம், கலைஞானச்சுடர், கலைமாமணி வல்லிபுரம் கற்கண்டு அவர்கள் நேற்று (11.04.2023) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னக்குட்டி ஆத்தையின் பேரன்புக்குரிய பேரனும் காலஞ்சென்ற பெருமாள்உடையார் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவகாமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தவமணிதேவி, ஸ்ரீபரிமளகாந்தம் மற்றும் துரைராஜா (விஜயன் - இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவலதா (லண்டன்), சிவப்பிரியா (உதவிச் செயலாளர் - கல்வியமைச்சு, வடமாகாணம்), உதயராஜ் (லண்டன்), சிவரதி (லண்டன்), Dr.உதயசீலன் (வைத்தியர் - ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜனகன் (லண்டன்), சுபாஸ்கரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), ஜெருஷா (லண்டன்), ஷெரோன் (லண்டன்), Dr.நிஷாந்தினி (வைத்தியர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிருதிக், தாமிரா, ஆரதனா, ஆதிரா, அகரன், ஆதிரன், தளிர் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற வெற்றிவேலாயுதம் மற்றும் ரேவதி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2023) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல.29, சாத்திரியார் லேன், அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.29, சாத்திரியார் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம் (15231)

தகவல்: குடும்பத்தினர்
தொடர்பு: 077 654 4354, 021 221 2067



தோற்றம்
1943.12.16

மறைவு
2023.04.11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இராணுவத்தளம் அமைக்கும் நோக்கம் எமக்கில்லை

## அமெரிக்க தூதுவர் அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை என அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியின் இலங்கை விஜயம் குறித்த கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தோ-பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை பிரதி பாதுகாப்புச் செயலாளர் ஜெடியா ரோயல் தலைமையிலான அமெரிக்க உயர்மட்ட பாதுகாப்புக் குழு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வந்திருந்தது.

உயர்மட்ட அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய குறித்த குழு, அமெரிக்க விமானப்படையின் இரண்டு சிறப்பு விமானங்களில் பிராந்திய பாதுகாப்பு, இலங்கை இராணுவத்தில் சீர்திருத்தங்கள், கடல்சார் கள விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்பான விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இக்குழு இலங்கைக்கு வந்திருந்தது.

இந்த விஜயம் இலங்கையில் ஒரு இராணுவத் தளத்தை அமைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்ற ஊகத்தை தூண்டியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்த அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை எனவும் சோஃபா ஒப்பந்தத்தை புதுப்பிக்கவோ அல்லது மீள் மதிப்பீடு செய்யவோ அமெரிக்கா எந்த முடிவும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த உலகவங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும்

(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.**




2023 வசந்த கால கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க வோஷிங்டனுக்கு சென்றுள்ளார். இதன்போது உலக வங்கி குழுமம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவ பணிப்பாளர் அன்னா பிஜெர்டேவை சந்தித்து கலந்துரையாடினார்.

அவருடன் இலங்கையின் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார மீட்சிக்கான அதன் நன்மைகள் குறித்து கலந்துரையாடியதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்போது சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த உலக வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என அவர் உறுதியளித்ததாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுடனும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கான நாட்டின் அர்ப்பணிப்பு குறித்து பேசியதாக செஹான் சேமசிங்க தெரிவித்தார். (நி)

# நாடு முழுவதும் வேகமாக பரவும் காய்ச்சல்

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்புளுவன்சா காய்ச்சல் மீண்டும் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள், சிறுகுழந்தைகள் மற்றும் வயதானவர்கள் சுவாசப் பிரச்சினை உள்ளவர்கள் இந்த நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அதிக காய்ச்சல், தசைவலி, மூக்கில் நீர் வடிதல், தொண்டை புண் மற்றும் சளி போன்றவை இதன் அடிப்படை அறிகுறிகளாகும் என விசேட மருத்துவர் பிரியங்கர ஜயவர்தன தெரிவித்துள்ளார். (நி)

# பாடசாலை விடுமுறையில் மாற்றம்

## விரைவில் அறிவிக்கப்படும்-கல்வி அமைச்சு

(கொழும்பு)

2022 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டதை அடுத்து, பாடசாலை விடுமுறை காலத்தை திருத்துவதற்கு கல்வியமைச்சின் அதிகாரிகள் தீர்மானித்து வருகின்றனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகும் பாடசாலை தவணை மே 29 ஆம் திகதி வரை தொடரும்.

இந்நிலையில், புதிய பாடசாலை நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மே 29 ஆம் திகதி ஆரம்பமாகும் 2022 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை ஜூன் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2022 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# யாழ்.தெல்லிப்பழையில் உளநலம் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் உளநலம் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் முகமாக குடும்ப புனர்வாழ்வு நிலையத்தால் நடைபவனியும் நாடக ஆற்றுகையும் நேற்று இடம்பெற்றது.

நடைபவனி தெல்லிப்பழை பொலிஸ் நிலைய முன்றலில் ஆரம்பமாகி தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை வரை நடைபெற்றது. நடைபவனியின் பின்னர் உளநல நாடக ஆற்றுகை தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது.

உளநல பாதிப்பு ஏற்படுவது எப்படி, இது தொடர்பான விழிப்புணர்வை பெற்று மீள்வது எவ்வாறு என்பது தொடர்பாக நாடக ஆற்றுகை இடம்பெற்றது. நிகழ்வில் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் பிராந்திய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் தினேஷ் சந்துரு, தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலாளர், தெல்லிப்பழை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6)

# மரண தண்டனை கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

மரண தண்டனை கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க சிறைச்சாலைகளுக்குள் 6 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1934 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன்முறையாக நாட்டில் சிறைச்சாலை விதிமுறைகளை மனிதாபிமான முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

# தங்கக் கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உத்தியோகபூர்வ தங்கக் கையிருப்பு மார்ச் மாதத்தில் 7.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, நாட்டின் உத்தியோகபூர்வ தங்கக் கையிருப்பு பெப்ரவரியில் சுமார் 28 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 30 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

அத்துடன், அன்னிய சொத்துகளின் கையிருப்பும் மார்ச் மாதத்தில் 21.3 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

பெப்ரவரியில் 2,219 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் வெளிநாட்டு சொத்து கையிருப்பு மார்ச் மாதத்தில் 2,691 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு கடந்த மாதம் 20.3 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் மார்ச் மாதத்தில் 2,184 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2,628 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. (நி)

# கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம்?

(கொழும்பு)

சந்தையில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி ஆயிரத்து 350 ரூபாவினை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், பண்டிகைக் காலம் என்பதால் சந்தையில் கோழி இறைச்சிக்கான தட்டுப்பாடு காரணமாக விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆரம்ப பிரிவு ஆசிரியர் திருமதி **கங்கா ஜெகதீஸ்வரன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**

**தீபமணி பாலதேவன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 1942.03.29 இறப்பு 2023.04.10

இணுவில் மத்திய கல்லூரி
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

(15234)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**விண்ணக வாழ்வில் 07.04.2018**

அமரர்

**திருமதி சிவகுமார் பராசக்தி**

(ஓய்வுநிலை அதிபர் – நல்லூர் ஞானோதய வித்தியாலயம்)

**திதி – ஸப்தமி [12.04.2023]**

ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் அம்மா
ஆறாத வடுவாய் உங்கள் பிரிவு
நித்தம் உங்கள் நினைவுகளுடன்
கடக்கின்றோம்
எம் வாழ் நாட்களை...

*உங்கள் நினைவுகளுடன்*
**குடும்பத்தினர்**
**021 221 6790**

(C-6345)

## அச்சுவேலியில்...

அச்சுவேலியில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த இடத்திற்கு பொலிஸார் வருகை தந்ததால் அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது.

அச்சுவேலியில் இயங்கிய குறித்த நெசவுசாலை யுத்தத்தின் பின் இயங்கவில்லை அதன் பின்னர் குறித்த கட்டிடத்தில் ஒரு மதஸ்தலம் ஒன்று அமைக்கப்பட்டு பிரார்த்தனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

குறித்த மத ஸ்தலத்தினால் சுற்று சூழலில் அதிகளவு சத்தம் போட்டு பிரார்த்தனை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதன் காரணமாக மாணவர்கள் மற்றும் நோயாளிகள் பல்வேறு உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகுவதாக தெரிவிக்கப்பட்டு மதஸ்தலத்திற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் தற்போது குறித்த மதஸ்தலம் அமைந்துள்ள நெசவு சாலையினை மீளவும் கைத்தொழில் அமைச்சு பொறுப்பெடுத்து நடத்த வேண்டும் என்றும், சுற்றுச்சூழலில் இடம்பெறும் ஒலி மாசடைதலை கட்டுப்படுத்துவதற்காவும் அமைந்துள்ள மதஸ்தலம் அகற்றப்பட வேண்டும் என கோரி நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது போராட்டகாரர்கள் பந்தல் அமைத்து போராட்டத்தில் ஈடுபட முற்பட்டபோது அங்கு வருகைதந்த அச்சுவேலி பொலிஸார் அவ்வாறு செய்ய முடியாதென தெரிவித்ததுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் விபரங்களை சேகரித்தனர். இந்நிலையில் தனியார் காணிக்குள் பந்தலை அமைத்து போராட்டகாரர்கள் தொடர்ந்து போராட்டம் மேற்கொண்டனர். இந் நிலையில் ஆளுநர் அலுவலகத்திலிருந்து வருகை தந்த அதிகாரிகள் இப் பிரச்சினைக்கு தீர்வு தருவதாக உறுதிமொழி அளித்ததையடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

(ம-7,9,33)

## டு பிளஸ்சிக்கு அபராதம்

பெங்களூர் அணி கப்டன் டு பிளஸ்சிக்கு ஐ.பி.எல் நிர்வாகம் ரூ.12 லட்சம் அபராதம் விதித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் பந்து வீச வழங்கப்பட்ட நேரத்தை விட, கூடுதலாக நேரம் எடுத்துக் கொண்டதால் கப்டன் டு பிளிஸ்சிக்கு ரூ.12 லட்சம் அபராதம் விதித்து ஐ.பி.எல் நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இத்தகவல் சமூகவலைத் தளங்களில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (4)


## கனடாவிற்கு வேலைவாய்ப்பு விசா ஆலோசனை

கனடாவிற்கு உடனடியாக வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுக்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

**077 557 4190**


(C-6342)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2805

**அஸ்ரின்**

பணமில்லாத
நேரத்திலும்
நம்மோடு
பயணிப்பவர்களே
உண்மையான
பாசம் உள்ளவர்கள்!



**பரீனா**



பழகிய மிருகங்களிடம்
இருக்கும் பாசம் கூட
பழகிய மனிதர்களிடம் இருப்பதில்லை

**ரஞ்சன்**

ஒருத்தன் பொய் சொல்கிறான் என்று
தெரிந்த பின்னும் அவனிடம்
"ஏன் பொய் சொன்னாய்" என்று கேட்பது
முட்டாள்தனம் ஏனெனில் அவன் அதற்கும்
பொய்தான் சொல்வான்

**சயானா**


பார்க்கும்
சொந்தமெல்லாம்
பாசமாய்
தெரிந்தாலும்
பழகிப் பார்
அதிலும் பாதி
வேசம் தான்
என புரியும்...!!!

**றியாஸ்**

கடந்து வந்த படிகளை உடைக்காதீர்கள்
ஒருவேளை இறங்குவதற்கு அதே படிகள்
தேவைப்படலாம்
விதி வலியது! காலம் கொடியது!



**தாட்சா**



எவரிடம் அளவிற்கு அதிகமாக தவறுகள்
உள்ளதோ அவரே மற்றவர் மீது
தேவையற்ற வீண்பழிகளை சுமத்தி தன்னை
உத்தமர் போல் காட்டிக் கொள்வார்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கப்பலில் தப்பிச்சென்ற 4 இளைஞர்கள் சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கக் கப்பலில் சட்ட விரோதமாக ஏறியிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட 4 இளைஞர்களும், மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த 25 வயது முதல் 32 வயதுக்கு இடைப்பட்ட நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

குறித்த கப்பல் கடந்த மாதம் 24 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததுடன் அது மறுநாள் ஐரோப்பா நோக்கி பயணத்தை ஆரம்பித்திருந்தது.

பின்னர், சுயஸ் கால்வாயில் நுழையும் போது, கப்பலில் பணியாளர்கள் முன்னர் அறிந்திராத நான்கு பேர் இருப்பதைக் கண்டு, தங்களது நிறுவனத்திற்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கடந்த மாதம் 28 ஆம் திகதி குறித்த இளைஞர்களின் அடையாள அட்டைகளை பரிசோதித்தபோது அவர்கள் இலங்கையர்கள் என கப்பலின் பணிக்குழாமினர் உறுதிப்படுத்தி இலங்கைக்கு அருகில் பயணிக்கவிருந்த மற்றுமொரு கப்பலிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

பின்னர் நேற்று குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் வழங்கிய அறிவித்தலின் படி, கடற்படை, காவல்துறை மற்றும் துறைமுகங்கள் அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகள் குழுவொன்று விசேட படகொன்றில் குறித்த கப்பலுக்கு சென்று அவர்களை கைது செய்துள்ளனர்.

அத்துடன் கடந்த மாதம் 25 ஆம் திகதி முற்பகல் தொழிலாளர்கள் அணிந்திருந்த ஆடை மற்றும் தலைக்கவசங்களை அணிந்து இந்தக் குழுவினர் கப்பலுக்குள் நுழைந்தனர்.

எவ்வாறாயினும் அவர்களுக்கு கொழும்பு துறைமுகம் மற்றும் கப்பலுக்குள் பிரவேசிக்க உதவிய நபர்களை கண்டறிய விசாரணைகள் இடம் பெறுவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# மின்வயர் மீது மரக்கிளை அறுந்து விழும் அபாயம்!



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அருகில் உள்ள உதிர வேங்கை வைரவர் ஆலயத்திற்கு சற்று முன்பாக உள்ள மின் வயர்களின் மீது பாலை மரக்கிளை ஒன்று முறிந்து வீழ்ந்து தொங்கியவாறு உள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனவே பாரிய அசம்பாவிதங்கள் ஏற்பட முன்னர் மின்சார சபையினர் குறித்த மரத்தை அகற்றுமாறு தெரிவித்துள்ளனர். (4-6-316)

## கண்ணீர் அஞ்சலி

ஈழத்து சீரடி அறங்காவலரும் எமது அன்பிற்குரிய பா.ராகவன் அவர்களின் அன்புத் தந்தையுமான

**தம்பித்துரை பாலச்சந்திரன்**

(ஓய்வுபெற்ற அரச நிலஅளவையாளர்)



அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
வலம்புரி பத்திரிகை நிர்வாகம். (இ)

# இந்திய முட்டைகளுக்கு சுகாதாரத் திணைக்களம் அனுமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இரண்டாவது கட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளுக்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய, இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகள் இலங்கை சுங்கத்தினூடாக பல்நோக்கு வணிகக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகளின் மாதிரிகள் தற்போது ஆய்விற்கு உட்படுத் தப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி ஹேமாலி கொத்தலாவல குறிப்பிட்டுள்ளார். பயன் பாட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள 10 இலட்சம் முட்டைகள் பண்டிகைக் கால பயன்பாட்டிற்காக பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்களுக்கு விநியோகிக் கப்படவுள்ளதாக பல்நோக்கு வணிக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (நி)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினதும் விளையாட்டு கழகத்தினதும் நிர்வாக சபை உறுப்பினர் திரு.சி.ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்பு மாமியார்

திருமதி. **தீபமணி பாலதேவன்**



அவர்கள் 10.04.2023 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாம் துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக
நிலையமும் விளையாட்டுகழகமும்.
(K.C.C.C & K.C.C.C.S.C) (சி-6337)

# இராசிபலன்

12.04.2023
பங்குனி 29, புதன்கிழமை
சப்தமி பின்னிரவு 2.48 மணிவரை
மூலம் முற்பகல் 11.15 மணிவரை

சுபநேரம் -4.36-6.06 மணிவரை
இராகுகாலம்-12.06-1.36 மணிவரை

சந்திராஷ்டமம் -
ரோகினி, மிருகசீரிடம்

வளவன்




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




செய்தொழிலில் சிறப்புக்களைக் காணும் நாள், மறைமுக எதிர்ப்புகள் அகலும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ரோக பயமுண்டு.




வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும்.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

மற்றவர்கள் அவமதித்தாலும் தாக்கினாலும் பழிவாங்க விரும்பாமல் அமைதியாக இருப்பதுதான் பொறுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்காக யாழில் மாபெரும் இசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மாற்றுத் திறனாளிகளின் இசை திறமையை வெளிக்கொண்டு வரும் முகமாக முதல் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாபெரும் இசைப் போட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெற உள்ளது.

சாவிகா சங்கீத அறிவாலயத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் குறித்த இசை போட்டிகள் இடம்பெற உள்ளன.

இப்போட்டிகளில் பங்கெடுக்க விரும்பும் மாற்றுத்திற னாளிகள் போட்டி இடம் பெறுகின்ற தினத்தில் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரையான காலப் பகுதியில் போட்டி இடம் பெறும் மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

போட்டியாளர்கள் தனிப் பாடல், தனிவாத்திய இசைக்கே அனுமதிக்கப்படுவர். போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான ஏதாவது ஒரு பாடலினை (கர்நாடக சங்கீதம்/ திரையிசை/ மேலைத்தேயம்) 6 நிமிடங்களுக்குள் பாட, இசைக்க முடியும். வாத்தியம் இசைப்போர் குறித்த வாத்தியக் கருவியை கொண்டு வருதல் வேண்டும்.

போட்டி நிறைவுறும் வரை பாதுகாவலர் போட்டியாளருடனிருக்க வேண்டும்.

இப்போட்டிகளில் அனைத்து விதமான மாற்றுத் திறனாளிகளும் வயது வேறுபாடின்றி பங்கெடுக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6-33-104)

## சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலய

# சோபகிருது வருடப்பிறப்பு உற்சவ நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சோபகிருது வருடப்பிறப்பு உற்சவ நிகழ்வுகள் நாளைமறுதினம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

பி.ப 1.30 மணிக்கு படிக்கட்ட பிஷேகமும், பி.ப 2.03 மணிக்கு சோபகிருது வருடப்பிறப்பு விஷேட பூசையும் அதனைத் தொடர்ந்து கைவிசேடம் வழங்கல், அர்ச்சனைகள் என்பன இடம்பெறவுள்ளன.

பி.ப 5 மணிக்கு உருத்திரா பிஷேகமும் மாலை 6 மணிக்கு உள் வீதி உற்சவ நிகழ்வும் நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை பி.ப 3.30 மணிமுதல் மருத்து நீர் வழங்கப்படும் எனவும் ஆலய தர்மபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4)

# பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் துவிச்சக்கர வண்டிகள், உழவியந்திரப்பெட்டிகள் மற்றும் இதரபொருட்கள் என்பன நீதிமன்ற வளாகத்தில் வைத்து எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், உழவியந்திரப்பெட்டிகள் மற்றும் இதர பொருட்கள் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும்.

காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை அன்றைய தினமே உடனடியாக வளா கத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.(4)



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் திருமஞ்ச திருவிழா நேற்று முன்தினம் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

# நேருக்கு நேர் மோ.சைக்கிள் மோதியதில் மூவர் படுகாயம்

## அல்வாயில் சம்பவம்



(கரணவாய்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஒன்று இடம்பெற்றது.

குறித்த விபத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் மூவர் படகாயமடைந்து ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-60)

# மரபுரிமை சின்னம் மீது பவுசர் மோதி விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நுணாவில் ஏ9 பிரதான வீதியில் தொல் பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி மீது எரிபொருள் பவுசர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தினால் தொல்பொருள் திணைக்களத்தினால் மரபுரிமை சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த பாரம்பரிய சுமை தாங்கி முற்றாக அழிவடைந்துள்ளது.

இவ்விடத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி, இளைப்பாறும் மடம், குடிநீர்க்கிணறு என்பன காணப்படுகின்றன.

விபத்தில் வாகன சாரதிக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாத போதிலும் வாகன முன்பகுதி சிறிதளவில் சேதமடைந்துள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30-33-104)

# முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகள் பயன்பாட்டில்

## 15 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல வியாபார மையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் வியாபாரிகளினால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைகளத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 15 வியாபாரிகள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற் மேற்கொள்ளப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது. (4-6-33-104)

# மோ.சைக்கிள் திருட்டு பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த HT5084 இலக்க முடைய நீல நிற ஹொன்டா சூப்பர் கப் 90 வகை மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்திற்கு முன்பாக நிறுத்தி வைத்துவிட்டு திருமணத்திற்கு சென்று திரும்பி வந்த பார்த்த போதே குறித்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இத்திருட்டு தொடர்பாக உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் தொடர்பான விபரம் அறிந்தவர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க முடியும்.

அண்மைக் காலங்களில் யாழ்.குடாநாட்டில் மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் மாவின் விலை மேலும் குறைவடையலாம்

## பால்மா இறக்குமதியாளர் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் சில மாதங்களில் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை மேலும் குறைவடையலாம் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதத் திற்குள் பால் மாவின் விலை மேலும் குறைவடையலாம் என பால் மா இறக்குமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித் துள்ளார்.

கடந்த வாரம் பால் மாவின் விலை குறைக்கப்பட்டது. இதற்கமைய 400 கிராம் இறக்குமதி செய்யப்பட்ட பால் மா பொதி ஒன்றின் விலை 80 ரூபாயால் குறைக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட 400 கிராம் பால் மா பொதி 1120 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதுடன், ஒரு கிலோ பால் மாவின் விலை 3100 ரூபாவிலிருந்து 200 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. (நி)

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தால் தகவலறியும் உரிமைக்கு அச்சுறுத்தல் இல்லை

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமைக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான சரத்துகள், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் இல்லை என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஊடகம் ஒன்றில் கருத்துரைத்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொலைபேசி உரையாடல்கள் உள்ளிட்ட தரவுகளை கண்காணிக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் தனியாக எந்த சரத்தும் உருவாக்கப்படவில்லை.

தற்போது குற்றச் செயற்பாடுகள் மற்றும் கொலை சம்பவங்கள் உள்ளிட்ட விடயங்களின் போது நீதிமன்ற அனுமதியுடன் தொலைபேசி தரவுகளை பெற்றுக் கொள்ளும் அதிகாரம் உள்ளது.

அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்உலக நாடுகள் பலவற்றிலும் சட்டமாக உள்ளதாகவும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். (நி)


PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2021 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 12.05.2023 (வெள்ளிக்கிழமை). 13.05.2023 (சனிக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம். காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக் கழகம். திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில். பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி :- 11.05.2023
ஏலவிற்பனை நடைபெறும் இடம் :- யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை
திகதி :- 12.05.2023 (வெள்ளிக்கிழமை)
13.05.2023 (சனிக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்.**
**இல:82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk

(C-6336)


## புளியடி தவமனை வீதியை சமூகஜோதி ஆ.ம செல்லத்துரை வீதியென பெயர்மாற்றம் செய்தல் தொடர்பான அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வதிரி வட்டாரத்தில் (வட்டாரம் 5) அல்வாய் தெற்கு (J/379) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளதும் பிரதேச சபையின் வீதிப்பதிவேட்டில் NPJKVE633 இலக்க குறியீட்டில் **"கலாநிலையம் ஐமூலை இணைப்பு வீதி"** எனவும் வேறு பெயராக "புளியடி தவமனை வீதி" எனவும் பதியப்பட்டுள்ளது. இவ்வீதியானது அல்வாய் துன்னாலை வீதியில் ஆரம்பித்து ஐமூலை வீதியில் முடிவடைகின்றது. குறித்த வீதியினை "சமூக ஜோதி ஆ.ம.செல்லத்துரை வீதி" என பெயர்மாற்றம் செய்து தருமாறு தலைவர் / செயலாளர் வதிரி தமிழ்மன்றம் டயமன்ட் விளையாட்டுக்கழகம் வட்டுவத்தை சனசமூக நிலையம் எனும் கடிதத் தலைப்பில் 2023.01.31 ஆம் திகதிய கடிதமூலம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். இவர்களது கோரிக்கையின்பிரகாரம் வீதி பெயர்மாற்றுவதற்கு தங்களுக்கு ஆட்சேபனையெதுவும் இருப்பின் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் செயலாளர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எனும் முகவரிக்கு எழுத்துமூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். 14 நாட்களுக்குள் எழுத்து மூலமான அறிவித்தல் எதுவும் கிடைக்கப்பெறாதுவிடின் வீதிக்கான பெயரினை மாற்றுவதற்கு சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தங்களால் ஆட்சேபனை தெரிவிக்கப்படின் காரணங்களும் நியாயப்படுத்தல்களும் ஏற்புடையதாக இருப்பின் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**கணேசன் கம்ஸநாதன்**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை.** 2023.04.12

(C-6339)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 320 | 360 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 280 | 300 |
| தக்காளி | 160 | 140 | 150 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| கோவா | 150 | 140 | 120 | 200 |
| கரட் | 120 | 180 | 140 | 200 |
| பூசணி | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 140 | 140 | 140 | 160 |
| வாழைக்காய் | 120 | 130 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 150 | 250 | 300 |
| வெண்டக்காய் | 240 | 300 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 | 280 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 150 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600-700 | 1000 |
| போஞ்சி | 280 | 250 | 240 | 350 |
| கத்தரிதம்புள்ள | 280 | 300 | 320 | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 85-90 | 70-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 280 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 150 | 240 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | -- | 250 |
| பொன்னாங்காணி | 80 | 120 | -- | 50 |
| வல்லாரை | 40 | 25 | 20 | 50 |
| ஈரப்பலா | 80 | 140 | -- | 150 |

## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதிவு இலக்கம்- PA 52-18.03.1972**

வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தின் பொதுமுகாமையாளர் பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது. விருப்பம் உள்ளவர்கள் 20.04.2023 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக **"தலைவர், பொதுமுகாமையாளர் பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி பளை"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் இணைப்புக்களை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் :- பிரதி
2. கல்வி தகைமைச் சான்றிதழ் :- பிரதி
3. சேவைத் தகைமைச் சான்றிதழ் :- பிரதி
4. இரு நற்சான்றிதழ் :- பிரதி

1. பதவி குறியீட்டு இல பொது முகாமையாளர் 101/08

சம்பள அளவுத்திட்டம் 20665-260X10-280X10-26065 (02/2022 இற்கு அமைய) (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் /அதற்கு சமமான தகைமை.
இத்தகைமையானது கணக்கியல்/வியாபார புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பாக பாடங்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்/ இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல்/முகாமைத்துவம்/வர்த்தகம் தொடர்பான உயர் டிப்ளோமா சித்தி.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலை பதவிஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த உயர் தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு :- வயதெல்லை 18-45 (சங்கத்தினூடாக விண்ணப்பிப்பவர்களுக்கு விலக்களிப்பு செய்யப்பட்டுள்ளது)**

**க.இராசதுரை (தலைவர்).**
**பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம் ,கண்டி வீதி, பளை.** (C-633

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanam.org



கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 150



"அப்படியானால் சற்றே நீங்கள் திரும்பி முதுகைக் காட்டிக் கொண்டு உட்காருங்கள்."

"எதற்காக?"

"முகத்தைப் பார்க்காமல் முதுகைப் பார்த்துக் கொண்டு புகழ்ச்சி கூறுவதற்காகத்தான். அதில் ஒன்றும் தவறு இல்லையல்லவா?"

"நீர் பேச்சில் மிக கெட்டிக்காரராயிருக்கிறீர்."

"இப்போது தாங்கள் அல்லவா முகஸ்துதி செய்கிறீர்கள்?"

"நீரும் உமது முகத்தைத் திருப்பிக் கொண்டு, முதுகைக் காட்டுவது தானே?"

"மகாராணி! போர்க்களத்திலாகட்டும், பெண்மணிகளிடமாகட்டும், நான் முதுகு காட்டுவது எப்போதும் கிடையாது. தாங்கள் தாராளமாய் என்னை முகஸ்துதி செய்யலாம்!"

இதைக் கேட்டு விட்டு நந்தினி 'கலீர்' என்று சிரித்தாள்.

"நீர் மந்திரவாதிதான் சந்தேகமில்லை நான் இம்மாதிரி வாய் விட்டுச் சிரித்து வெகு காலம் ஆயிற்று!" என்று சொன்னாள்.

"ஆனால், அம்மணி! தங்களைச் சிரிக்கப் பண்ணுவது வெகு அபாயம்! தடாகத்தில் தாமரை சிரித்து மகிழ்ந்தது தேன் வண்டு மயங்கி விழுந்தது!" என்றான் வந்தியத்தேவன்.

"நீர் மந்திரவாதி மட்டுமல்ல கவியும் போலிருக்கிறதே!"

"நான் முகஸ்துதிக்கும் அஞ்ச மாட்டேன் வசவுக்கும் கலங்க மாட்டேன்."

"உம்மை யார் வைதது?"

"சற்றுமுன் என்னைக் 'கவி' என்றீர்களே?"

"அப்படியென்றால்?"

"நான் சிறுவனாயிருந்தபோது என்னைச் சிலர் 'குரங்கு மூஞ்சி!' என்று சொல்வதுண்டு. வெகு நாளைக்குப் பிறகு இன்றைக்குத்தான் தங்களுடைய பவளச் செவ்வாயினால் அதைக் கேட்டேன்."

"உம்மையா 'குரங்கு மூஞ்சி' என்றார்கள்? யார் அப்படிப்பட்ட புத்திசாலிகள்?"

"அவர்களில் யாரும் இப்போது உயிரோடில்லை."

"உம்மை நான் அவ்விதம் சொல்லவில்லை. கவிபாடக் கூடியவர் போலிருக்கிறதே என்று சொன்னேன்."

"கொஞ்சம் கவியும் பாடுவேன் ஆனால் பகைவர்களுக்கு முன்னால்தான் பாடுவேன். வில்லம்பினால் சாகாதவர்கள், சொல்லம்பினால் சாகட்டும் என்று!"

"ஐயா, கவிராஜ வீரசிங்கமே! உம்முடைய பெயர் என்னவென்று இன்னமும் சொல்லவில்லையே!"

"என் சொந்தப் பெயர் வந்தியத்தேவன் பட்டப்பெயர் வல்லவரையன்."

"அரச குலத்தினரா?"

"பழைய புகழ்பெற்ற வாணாதிராஜர் குலத்தில் வந்தவன்."

"இப்போது உங்கள் ராஜ்யம்?"

"மேலே ஆகாசம் கீழே பூமி இப்போது நான் சகல பூமண்டலத்துக்கும் ஏக சக்ராதிபதி!"

நந்தினி சிறிது நேரம் வல்லவரையனை ஏறத்தாழப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்படி ஒன்றும் நடக்காத காரியம் இல்லை. உம்முடைய பூர்வீக ராஜ்யத்தை நீர் திரும்பவும் பெறலாம்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மந்திரியான காக்கை அண்ணாச்சி

(நேற்றைய தொடர்ச்சி)

பன்றியார் வேகமாக மேடையை நோக்கி நடந்தார். வழியில் நின்றிருந்த யானையார் பட்டென்று நகர்ந்து அவருக்கு வழி விட்டார்.

பன்றியார் மேடைக்கு வந்ததும் காட்டரசுத் தலைவர் நாற்றம் தாள முடியாமல் தனது பெரிய காதுகளை தேய்த்துக் கெண்டார்.

"என்னுடைய வாழ்க்கையே சுகாதாரப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டவன். அது மட்டுமல்ல.. யானையார் போன்ற பெரியவர்கள் கூட என்னைக் கண்டதும் விலகி நிற்பார்கள். எனவே என்னை உங்கள் சுகாதார மந்திரியாக தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.." என்று சொல்லிவிட்டுப் போய் உட்கார்ந்தார்.



அடுத்து தனது சிவப்பு நிற இறக்கைகளை விரித்துப் பறந்து வந்தது பட்டாம்பூச்சி. முயலார் பட்டாம்பூச்சியின் வண்ணத்தைப் பார்த்து மயங்கினார்.

தனது சிறகுகளை அசைத்தபடி பேசியது பட்டாம்பூச்சி.

"அண்ணாச்சி பன்றியார் வந்து நின்று பேசிய இடத்தை சுத்தம் செய்யவே தனியாக ஒரு சுகாதார மந்திரியைப் போட வேண்டும்" என்றும் சொல்லென்று எல்லாம் சிரித்தன.

"என்னைப் பாருங்கள்.. என் சிறகுகளைப் பாருங்கள். என்னைப் போல நீங்களும் அழகாக இருக்க உங்கள் வாக்குகளை எனக்கே போடுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பறந்து சென்றது.

அடுத்து காகம் வந்தது. "பன்றியார் வந்தார் நான் சுகாதாரத்தின்' அவதாரம் என்றார்.. நானே சுத்தம் செய்கிறேன் என்றார். வாஸ்தவம் தான். அவர் இருக்கும் இடம் எப்படிப்பட்ட இடம் என்று நமக்குத் தெரியாதா? அது கிடக்கட்டும். நமது பட்டாம்பூச்சி அண்ணாச்சி குடிப்பது தேன்தான்' இல்லை என்று சொல்லவில்லை. அவர் படுப்பது எங்கு என்று தெரியுமா? பிராணிகளின் மலம். மலத்தை உண்பவருக்கு உங்கள் ஓட்டா?

மலத்தில் உறங்குபவருக்கு உங்கள் ஓட்டா?"

என்ற கேள்வியுடன் பறந்து சென்றார் காக்கையார்.

அதன் பின்னர் பறவைகளும், மிருகங்களும் இவற்றை ஆதரித்தும், தாக்கியும் பேசி ஓட்டு வேட்டை ஆடின.

கல்டைசியாக நரியாரை எழுந்து பேசும்படி எல்லாம் வற்புறுத்தின.

நரியார் தனது வாலால் முகத்தைத் துடைத்தபடி மேடையில் ஏறினார். எப்போதும் நரியார் பேச்சுக்கு பரவலான மரியாதை இருந்தது.

"காட்டரசர் நாமம் வாழ்க" என்று பேச ஆரம்பித்தார் நரியார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் செயல்களை செய்து காட்டுபவர்கள் சிலர். செய்து காட்டும் செயல்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர் சிலர். என்ன செயல் நடைபெறுகின்றது என்று அறியாமலேயே இருப்பவர் சிலர் – *யாரோ*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறுவர் இல்லங்களின் தகவல்களை சேகரிக்காதது ஏன்?

சிறுவர் இல்லங்கள் குறித்து வெளிவருகின்ற தக்வல்கள் மிகவும் வேதனை தருவதாக அமைகின்றன.

ஆம், அண்மையில் கிறிஸ்தவ சபையொன்று உரிய பதிவுகள் இல்லாமல் சிறுவர் இல்லமொன்றை நடத்தியதாகவும் அந்தச் சிறுவர் இல்லத்தில் இருந்து சிறுமிகள் சிலர் தப்பிச் சென்றதன் காரணமாக அச் சிறுவர் இல்லம் பற்றிய தகவல்கள் தெரியவந்ததாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

இதற்கு மேலாக, அச்சிறுவர் இல்லம் தொடர்பில் வெளியாகிய விரும்பத்தகாத தகவல்களின் உண்மைத்தன்மைகளை சம்பந்தப்பட்டவர்களின் விசாரணைகளே தீர்மானிக்கும்.

எதுஎவ்வாறாயினும் உரிய பதிவுகள் இன்றி சிறுவர் இல்லம் நடத்தியமை மிகப்பெரும் தவறு என்பதை குறித்த சபை இப்போதாவது உணர்ந்திருக்கும்.

அதேவேளை குறித்த சிறுவர் இல்லம் இயங்குவது பற்றிய தகவல்களை அந்தப் பகுதி சார்ந்த அரச நிர்வாகம் அறியாமல் இருந்தது ஏன்? அல்லது அறிந்திருந்தும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? என்ற கேள்விகள் எழவே செய்கின்றன.

உண்மையில் குறித்த சபையில் சிறுவர் இல்லம் இயங்குவது இரகசியமான விடயமன்று.

ஏனெனில் அந்தச் சிறுவர்கள் அப்பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு நிச்சயம் சென்று வருவர்.

தவிர, அந்தச் சபையில் சிறுவர் இல்லம் இயங்குவது பற்றிய விபரங்களை அந்த ஊரும் அயலும் நிச்சயம் அறிந்திருக்கும்.

நிலைமை இதுவாக இருக்கையில், அச்சிறுவர் இல்லத்தின் பதிவு. அதில் இருக்கக்கூடிய சிறுவர்களின் எண்ணிக்கை என்பன பற்றிய விபரங்களைச் சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் ஆய்வுக்குட்படுத்தியிருப்பார்களாயின், இப்போது நாம் அறிந்து மன வேதனைப்படுகின்ற சம்பவங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

அதேநேரம் அந்தச் சிறுவர் இல்லத்தின் மூலம் ஏழைச் சிறுவர்கள் உணவு, உடை, உறைவிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கும் துறைசார் ஆசிரியர்களிடம் மேலதிகமாகக் கற்கின்ற சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் கிடைக்கப் பெற்றிருக்கும்.

ஆக, இனியேனும் அந்தந்த ஊர்களில் – பிரதேசங்களில் இருக்க்க்கூடிய சிறுவர் இல்லங்கள் மற்றும் சபைகள் அமைப்புகள் அவற்றின் செயற்பாடுகள் என்பன தொடர்பில் உரிய பிரதேச செயலகங்கள் குழுவாக சென்று ஆய்வு நடத்துவது கட்டாயமானதாகும்.

இதைச் செய்வதன் மூலம் நம் மண்ணில் நல்லது நடப்பதற்கான வாய்ப்பு உருவாகும்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில ஏற்பாடுகளுக்கு உடன்படப்போவதில்லை

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் ஒருசில ஏற்பாடுகளுக்கு உடன்படப் போவதில்லை. பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு வழங்கப்பட்டுள்ள நீண்ட வரைவிலக்கணம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

சகல தரப்புடன் விரிவான பேச்சு வார்த்தையை தொடர்ந்து சட்டமூல வரைபு திருத்தம் செய்யப்படும் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ள ஒருசில ஏற்பாடுகளுக்கு இணாங்கப்போவதில்லை. ஒருசில ஏற்பாடுகள் நிச்சயம் திருத்தப்பட வேண்டும் என்பதை அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுத்துரைத்துள்ளேன்.

நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் புதிய வரைபை தயார் செய்தோம்.

நாங்கள் தயார் செய்த சட்டமூல வரைபு தற்போது வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லை. இருப்பினும் நாங்கள் அறிமுகப்படுத்திய ஏற்பாடுகள் புதிய வரைபில் உள்வாங்கப்பட்டுள்ளன.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைபின் ஒருசில ஏற்பாடுகளுக்கு இணங்கப் போவதில்லை. பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேக நபரை தடுத்து வைக்கும் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்க வேண்டும் அல்லது நீதிமன்றத்திடம் இருக்க வேண்டும்.

பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு நீண்ட வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப பலவிடயங்கள் பயங்கரவாத செயற்பாடாக அடையாளப் படுத்தப்படலாம். ஆகவே பயங்கரவாதம் என்ற சொற்பதத்துக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணமானது மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பின்னர் சகல தரப்புடன் விரிவான பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படும். சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் திருத்தம் செய்யப்பட்டு நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்படும் என்றார். (ம-7,9)

# உணவுத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் நடாத்தப்படும் "யாழ் பாரம்பரிய உணவுத் திருவிழா-2023" இம்மாதம் 15 மற்றும் 16ம் திகதிகளில் யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் பி.ப 2.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

அம்மாச்சி பாரம்பரிய உணவகம் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்புடன் இடம்பெறும். இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய சைவ, அசைவ உணவுகளினை மீண்டும் சுவைப்பதற்கும் பாரம்பரிய இசையினைக் கேட்டு இன்புற்றிடவும் இளைய தலைமுறையினருக்கு ஓர் வாய்ப்பாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7,9)

# ஜனாதிபதி வேட்பாளருக்கான தகைமையுடையவர் பசிலே

## பெரமுன பெருமிதம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாட்டை வழிநடத்த மிகவும் பொருத்தமானவராக இருப்பார் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பசில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இந்நாட்டின் வறிய மக்களை முன்னேற்றுவதற்கும், உலகின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றுவதற்கும் செயற்பட்டு வந்தவர்.

அத்துடன், நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் சர்வதேச சமூகத்துடன் சிறப்பான விதத்தில் செயற்பட்டு யுத்தத்துக்கு தேவையான ஆதரவைப் பெற்றவர் எனவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள ஏழை மக்களின் கஷ்டங்களை புரிந்துகொண்டு, அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான பல நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய தலைவர் பசில் எனவும், கடந்த காலங்களில் அவர் மீது போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதாகவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (ம-7,9)

# நைஜீரிய பிரஜை நாடுகடத்தப்பட்டார்

(நீர்கொழும்பு)

பஹாமாஸ் நாட்டுக்கு சொந்தமான போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற நைஜீரிய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நைஜீரியாவில் இருந்து லைபீரியாவுக்கும், பின்னர் மொராக்கோவுக்கும் அவர் பயணித்துள்ளார். பின்னர் கட்டார் ஏர்வேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கியூ.ஆர். 654 என்ற விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்த அவர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவுச்சீட்டை பரிசோதித்த விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் அவரது கடவுச்சீட்டு போலியானது என கண்டறிந்தமையால் உடனடியாக அவரை நாடு கடத்துவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,9)

## சில அரச மருந்தகங்களினால் அரசுக்கு கோடிக்கணக்கில் நஷ்டம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 50 மருந்தகங்களில் (ஒசுசல) 26 மருந்தகங்களில் தேவையற்ற செலவுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 5 கோடியே 32 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அவற்றில் 10 மருந்தகங்களின் இழப்பு, 15 இலிருந்து 175 வீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மருத்துவப் பொருட்கள் சேதம் மற்றும் காலாவதியானமை இந்த இழப்புக்கு முக்கிய காரணம் என்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கோவிட் தொற்று பரவலும் இந்த நஷ்டத்துக்கு முக்கியமானதொரு காரணம் என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் கூறுகிறது. (ம-7,9)

## இலை சுருட்டி நோய் தாக்கத்தால் யாழில் மிளகாய் செய்கை பாதிப்பு

தற்போது நிலவிவரும் அதிக வெப்பத்தினால் மிளகாய் செய்கையில் ஏற்பட்டுள்ள இலை சுருட்டி நோயினால் அறுவடை பாதிப்படைந்துள்ளதாக யாழில் மிளகாய் செய்கையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

இந்த நோய்த்தாக்கத்தினால் மிளகாயின் விளைச்சல் குறைவடைந்துள்ளதாகவும் இதனால் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மிளகாய் செய்கையாளர்கள் தெரிவித்தனர். எனவே மிளகாய்ச் செய்கைககு தேவையான கிருமிநாசினிகளை குறைந்த விலைக்கு பெற்றுத்தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மிளகாய் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்

# 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(குருமன்காடு)

வவுனியாவில் 78 வர்த்தக நிலையங்களில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட நிறுவை, அளவைப் பிரிவின் உதவி அத்தியட்சகர் எஸ்.இராஜேஸ்வரன் நேற்று தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எமது அமைச்சின் உத்தரவுக்கமைய வவுனியா வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா இலுப்பையடி, சந்தை உள்வட்ட வீதி, கண்டி வீதி, பழைய பேருந்து நிலையம், நெளுக்குளம், பசார் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள 78 வர்த்தக நிலையங்கள் மீது இந்த திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது நிறுத்தல் தராசுகள் முத்திரையிடப்பட்டுள்ளதா, நிறுத்தல் அளவைகள் சரியாக உள்ளனவா, பொதி செய்யப்பட்ட பொருட்களின் நிறுத்தல் அளவைகள் சரியானவையா என்பது குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதனை முறையாக செய்யாத 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6-250)

# கிராமத்திற்கு செல்லும் பாதையை வழிமறித்து புகையிரதப் பாதை

## வவுனியா விஜயபாகுகம மக்கள் எதிர்ப்பு



(குருமன்காடு)

கிராமத்திற்கு செல்லும் பாதையை மறித்து அனுராதபுரம் - வவுனியா புகையிரதப் பாதை அமைக்கும் நடவடிக்கைக்கு விஜயபாகு கம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து, திருத்த வேலைகளை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஈரப்பெரிய குளம், விஜயபாகு கம கிராமத்தில் 50 வரையிலான குடும்பங்கள் வசித்து வருகின்றனர். குறித்த கிராம மக்கள் கடந்த 32 வருடங்களாக பயன்படுத்தி வந்த வீதியை மறித்து புகையிரதப் பாதை நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த கிராம மக்களை அப் பாதையில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மாற்றுப் பாதையை பயன்படுத்துமாறு புகையிரதத் திணைக்களத்தினர் கூறியிருந்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 32 வருடங்களாக பயன்படுத்தி வரும் பாதையை தாம் தொடர்ந்து பயன்படுத்தும் வகையில் போக்குவரத்திற்கு ஏற்றதாக புதிய தண்டவாளங்களை அமைக்குமாறு அப் பகுதி மக்கள் புகையிரதத் திணைக்களத்தினரிடம் கோரினர். அதற்கு அவர்கள் இணங்காமையால் புகையிரதப்பாதை அமைக்கும் பணியைதடுத்து நிறுத்தினர்.

பொலிஸார் தலையிட்டு குறித்த விடயம் தொடர்பில் புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றதுடன், அம் மக்களின் கோரிக்கைக்கு சாதகமான பதிலை வழங்குமாறும் கோரினர்.

இதனால் அநுராதபுரம் - வவுனியா வரையிலான புகையிரதப் பாதை திருத்தப் பணிகள் ஈரப்பெரியகுளம், விஜயபாகு கம பகுதியில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களும் இடம் பெற்றுவருகின்றன. இதேவேளை, தமக்கான தீர்வு கிடைக்காவிடின் தாம் போராட்டத்தில் ஈடுபடுவோம் என அக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-250)

# புத்தரை காணவில்லை தமிழர் ஒருவர் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வைக்கப்பட்டிருந்த புத்தரை காணவில்லை என அப் பகுதியில் வசித்து வரும் தமிழர் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம், பழைய புகையிரத நிலையத்திற்கு முன்பாக கடந்த 9 ஆம் திகதி புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அது அன்றையதினம் மாலையே அகற்றப்பட்டிருந்ததுடன் அப்பகுதியை சேர்ந்த ஒருவர் வைத்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த நபர் தானே தனது காணியில் புத்தர் சிலையை வைத்ததாகவும், அதனைக் காணவில்லை எனவும் செட்டிகுளம் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நோர்வேயில் இருந்து இலங்கைக்கு வருகை தந்து நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின பெண் ஒருவரை திருமணம் செய்திருந்ததுடன், கடந்த பெப்ரவரி மாதமளவில் செட்டிகுளத்திற்கு வந்து தங்கியுள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த புத்தர் சிலையை அவர் தனது காணிக்கு முன்னால் உள்ள அரச காணியில் வைத்துள்ளார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-250)

# "வீரகத்தி விநாயகன்" இசைப்பேழை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் கு.வீராவின் "வீரகத்தி விநாயகன்" இசைப்பேழை வெளியீட்டுவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் கோபுர வாயிலில் கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் பரிபாலன சபைத் தலைவர் செ.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இ.புஸ்பராசா குருக்கள், யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், வடமாகாண சபை பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இராஜமல்லிகை சிவசுந்தரசர்மா மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# முல்லைத்தீவு வற்றாப்பளையில் ஒருவித நோய்களுடன் கால்நடைகள்



(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய சூழலில் நடமாடும் மாடுகள் சிலவற்றில் ஒருவகை நோய்த் தொற்று காணப்படுவ[illegible] பக்தர்கள் தெரிவிக்கின்னர். குறித்த சம்பவம் தொடர்பில் [illegible] வருவது, நேற்று முன் தினம் திங்கட்கிழமை பங்குனித் திங்கள் இறுதி நாள் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோயிலுக்கு சென்றிருந்தார்கள். இந்நிலையில் கோயிலின் வெளிப்புறப் பகுதியில் அதிகளவிலான கால்நடைகள் நடமாடித் திரியும் நிலையில் அவற்றில் சிலவற்றில் கொப்பளம் போன்ற புண்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கொப்பளம் போன்ற அடையாளங்களுடன் புண்கள் காணப்பட்டதுடன் சில இடங்களில் தசைகள் வெடித்து இரத்தம் வழிவதும் அவதானிக்கப்பட்டுள்ளதாக கோயிலுக்கு சென்றவர்கள் தெரிவித்தனர்.

எனவே முல்லைத்தீவு மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை உரிய கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-104)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளிகளுக்கான இலவச கண்புரை சத்திரசிகிச்சை திட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக சில அமைப்புக்களின் உதவியுடன் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மருதன்கேணி பிரதேச செயலக பிரிவில் மருதங்கேணி, அம்பன், முள்ளியான் ஆகிய வைத்தியசாலைகளில் நடாத்தப்பட்ட கண் பரிசோதனை முகாம்களில் 141 பேர் கண்புரை சத்திரசிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதல் கட்டமாக 50 பேர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதியும், இரண்டாம் கட்டமாக 50 பேருக்கு மாதம் 25 ஆம் திகதியும் ஏனையவர்களுக்கு மே மாதத்திலும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இச் சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவருவதற்கும் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் அவர்களை மீள மருதங்கேணிக்கு அழைத்துச் செல்வதற்கும் போக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதார திணைக்களத்தினால் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

18 ஆம் திகதி சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கு முதல் நாளான 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு மருதங்கேணி, அம்பன், முள்ளியான் வைத்தியசாலைகளுக்கு சமூகந்தரல்வேண்டும்.

25 ஆம் திகதி சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கு முதல் நாளான 24 ஆம் திகதி காலை 8 மணிக்கு மேற்படி வைத்தியசாலைகளுக்குச் சமூகந்தருதல் வேண்டும்.

சத்திரசிகிச்சைக்குப் பின்னர் அன்றைய தினம் மாலையிலேயே அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து மருதங்கேணிக்கு அழைத்துச் செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் திகதி சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு ஏற்கனவே சுகாதார திணைக்களத்தினால் தொலைபேசி மூலம் நேரடியாக அறியத்தரப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட நோயாளர்களை உரிய நேரத்தில் சமூகமளித்து இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாவட்ட சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விபரீத முடிவெடு...

தூக்கிட்டு உயிருக்கு போராடிய நிலையில் உறவினர்கள் அவரை மீட்டு வைத்தியசாலைக்கு அழைத்து வரும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இதில் எழுதுமட்டுவாழ் தெற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த ஒன்றரை வயதுக் குழந்தையின் தாயாரான 31வயதான இளம் குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,9,30)

## இளைஞன்...

ஞன் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் துசாந்தன் (வயது-35) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இவர் மயங்கிய நிலையில் இளைஞர்கள் சிலரால் அவரது வீட்டில் விடப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,9)

## குடும்பஸ்தர்...

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,9)

## மின்சாரம் தாக்கி...

சுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த உலகநாதன் கஜந்தன் (வயது-22) என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் தொடர் யானைகள், பன்றிகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்குள்ள தோட்டக் காணி ஒன்றுக்கு யானை வேலி போடப்பட்டிருந்தது. குறித்த வேலிக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை அவதானிக்காது குறித்த வேலி ஊடாக குறித்த இளைஞன் பயணித்துள்ளார்.

இதன்போது யானைக்கு வைத்த மின்சார வேலியில் சிக்கி அவர் உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,250)

## நலன்புரி பணி...

யில் இடம்பெற்றுள்ளது.

இதில் நாகராஜன் (வயது-48) என்பவரே அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதியைச் சேர்ந்த 20 வயதான இளைஞன் ஒருவர் கடந்த சில மாதங்களாக மனநோய் ஏற்பட்டு தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கட்கிழமை காலை அங்கிருந்து தப்பித்துள்ளார்.

தப்பித்து வந்த இளைஞன் புத்தூர் சந்திப் பகுதியில் உள்ள தனது உறவினர்களின் வீடுகளுக்கு சென்று அட்டகாசம் புரிந்த நிலையில் அவர்கள் இது தொடர்பாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் வைத்தியசாலையில் குறித்த மனநோயாளி தன்னுடன் நட்பாக பழகியவர் என்ற அடிப்படையில் நாகராஜன் நோயாளியை அழைத்துச் செல்ல செவ்வாய்க்கிழமை மதியம் மீசாலை பகுதிக்கு வந்துள்ளார்.

இவ்வாறு வந்தவர் நோயாளியின் உறவினர்களுடன் பேசி விட்டு வீட்டுக்குள் சென்ற நிலையில் இளைஞன் அலவாங்கினால் நாகராஜனைத் தாக்கி கொலை செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9,30)

## தேர்தல் மீண்டும்...

நேற்று இடம்பெற்ற தேர்தல் ஆணைக்குழுவின் விசேட சந்திப்பில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த உள்ளூராட்சி தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த, உள்ளூராட்சி தேர்தல், எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எனினும், தேர்தலுக்கு அவசியமான நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் நிர்வாகத்துக்கு அப்பாற்பட்ட காரணங்களினால், தேர்தல் பிற்போடப்படுவதாக, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இரண்டாவது தடவையாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தேர்தலுக்கு தேவையான நிதி கிடைப்பதற்கான உறுதியான திகதி அல்லது தேர்தல் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றின் தீர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் புதிய திகதியொன்று தீர்மானிக்க வேண்டியேற்படின், தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலை பெற்றுக் கொண்டதன் பின்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களால் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## பயங்கரவாத...

கொழும்பைத் தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திரிகளுக்கு இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதியினால் சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டமை உள்ளிட்ட நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகளையும் அமைச்சர் எடுத்துரைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை அமைப்பதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்த மேலதிக தகவல்களையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வழங்கியதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பிலும் சர்வதேச சமூகத்திற்கு விளக்கமளிக்

## பரந்தன்...

பகுதியில் நேற்று மாலை மதுபானம் அருந்தியவர்களிடம் மதுபானம் அருந்த வேண்டாம் எனக் கூறியதை அடுத்து ஆத்திரமடைந்த குண்டர் கும்பல் பரந்தன் ரயில் நிலைய ஊழியர்களை தாக்கி காயப்படுத்தியதுடன், புகையிரத நிலைய உடைமைகளை சேதப்படுத்தியுள்ளது. சந்தேகநபர்களை கைது செய்ய விசேட பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-7,9,33)

## ஐ.எம்.எப்...

கள் தமது நாட்டுக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்கான வாய்ப்பு இதன்மூலம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார். (ம-7,9)

## எல்லை நிர்ணய...

தனவிடம் கையளிக்கப்பட்டது.

எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவினால் இந்த அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தொகுதிகள் நிர்ணயம் செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட தேசிய எல்லை நிர்ணயக் ஆணைக்குழு நவம்பர் 2022 இல் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 396
வெற்றி இலக்கங்கள்: விருச்சிகம் 03 22 49 60
விசேட சீட்டிழுப்பு
லக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 68533
தங்கக் காசுகள் 1422793 0526478
கைத் தொலைபேசிகள் 1828066 0004194
மடிக் கணினிகள் 1103009 1547046
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1542
வெற்றி இலக்கங்கள்: சிம்மம் 1 7 2 5 8 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.04.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1117
E 20 27 36 65

கொவிசெத
திகதி 2023.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 3329
G 19 36 57 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1435
N 04 22 46 49 72

மஹஜன சம்பத
திகதி 2023/04/11
சீட்டிழுப்பு இலக்கம் 5087
H 6 4 2 5 0 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2062 | நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.04.11 | தினம் செவ்வாய்க்கிழமை
B 47 68 70 73
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,916,820/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.11
சீட்டிழுப்பு இல: 4223
வர்ணம் : பச்சை
ரூ. 4,555,020/-
வெற்றி இலக்கங்கள் 11 19 36 64 J
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 312
சீட்டிழுப்பு திகதி 2023.04.11
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 29 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,981,100/-
DLB


ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,407,035.60
திகதி 2023-04-11
வெற்றி வாரம் 3774
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 02 05 16 50
ரூ. 11,131,980/-
DLB

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 03 10 40 71 72
சீட்டிழுப்பு வாரம் 1238
2023.04.11 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 323,068,528.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1888
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.04.11
ரூ. 4,565,120/-
வெற்றி இலக்கங்கள் 25 28 29 49 B
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## இராமசாமி திருச்செல்வம்

12.04.2023

கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (15225)

குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடிய்வில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15233)

076 825 7716 (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15230)

076 436 5814, 076 739 0413



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 39 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15230)

076 733 6047
076 333 6079
076 733 6093



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு)
36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15230)

076 755 8606
077 638 5683



## LED Video Wall for Rent

ஆலய நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள் பரிசளிப்பு விழாக்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை நேரலையாகவும், நிகழ்வு இடம்பெறும் இடத்தில் LED திரையில் (LED Video wall) காட்சிப்படுத்த அழையுங்கள் (15224)

075 111 2222



## பண்ணை வேலைக்கு ஆள் தேவை

சம்பளமாக சுமார் 55,000/- வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF & ETF முழுவதுமாக எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) (C-6343)

077 820 9424


# அந்தியேட்டி
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 14.03.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதப்பேறடைந்த எமது குடும்பத் தலைவரும் எடிசன் கல்வி நிலையத்தின் அதிபரும் ஸ்தாபகருமாகிய

## அமரர் திரு. B.P. பாஸ்கரன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை ( 13.04.2023 ) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல. 63, கல்லூரி வீதி, நிராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.** (15220)

தொ. பே. 077 161 1865

இங்ஙனம்
குடும்பத்தினர்

## தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடாத்தும்

### மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி-2023

**இடம் : சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை.**

**காலம் : 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : முற்பகல் 8.30 மணி**

தரம் 03 - 13 வரையான பிரிவுகளாகவும், அதற்கு மேற்பட்ட வயதினருக்கு திறந்த போட்டிகளாகவும் நடாத்தப்படும்.

**அனுசரணை : அமரர் ஆறுமுகம் உதயசங்கர் ஞாபகார்த்தமாக குடும்பத்தினர்**

தொ.பெ.இல.
076 759 7954
077 630 2307 (C-6340)

தம்பசிட்டி உதயதாரகை
விளையாட்டுக் கழகம்
தம்பசிட்டி - பருத்தித்துறை


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15232)

077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.